## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண்.7/2017

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02–ம் நாள் சனிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 02.08.2025 | தகப்பனார் பெயர்: | ரங்கசாமி |
| பெயர்: | ரங்ககிரி (PW-1 Cross ) | தாலுக்கா: | மயிலாடுதுறை |
| கிராமம்: | திருநகரி | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 72/2025 |

**<u>1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 02.08.2025</u>**

1. நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னிடம் தாவா சொத்து அனுபவத்தில் இருக்கும்போது அதே சொத்திற்கு 1–ம் பிரதிவாதியிடம் நீ எப்படி அதற்கு பணம் கொடுத்தாய் என்று நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து திருநகரி கிராமத்தில் அமைந்துள்ளது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் பாரா 3–ல் வழக்கு சொத்து 2–ம் பிரதிவாதி குடும்பத்திற்கு பகுதி பாத்தியம் உடைய மணலி எஸ்டேட் நிர்வாகத்தன் கீழ் உள்ள ஸ்ரீரங்க அத்தியானபாடசாலைக்கு சொந்தமானது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை 2004–ல் இன்பசேகர் என்பரிடமிருந்து வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். இன்பசேகர் என்பவர் இறந்த 2–ம் பிரதிவாதியின் வாரிசு இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து இன்பசேகருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

2. இன்பசேகர் எனக்கு உள் குத்தகை எழுதிக்கொடுத்துள்ளார் என்று நான் சொல்வது செல்லாது என்றால் சரியல்ல. இன்பசேகருக்கு தாவா சொத்தை

பொறுத்து உள் குத்தகை விடவோ வேறு எந்த விதமான பாராதீனமும் செய்ய உரிமை இல்லை என்றால் சரியல்ல. அதனால் இன்பசேகரால் எழுதிக்கொடுக்கப்பட்ட எந்த ஆவணமும் செல்லத்தக்கதல்ல என்றாலும் அதன் மூலம் நான் எவ்வித பரிகாரமும் கோர முடியாது என்றாலும் சரியல்ல. தாவா வழக்கு சொத்து எந்த காலத்திலும் எனது வசத்திலும், அனுபவத்திலும் இல்லை என்றால் தற்போதும் எனது அனுபவத்தில் தான் உள்ளது. இன்பசேகர் எனக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் பக்கத்தில் 5 நபர்களின் கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். அதில் சாட்சி கையெழுத்தும் உள்ளது. ஆனால் பக்கம் 2–ல் மூன்றுபேர் கையெழுத்துதான் உள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பரிமளா என்பவரின் கையெழுத்து வேறு மையினால் உள்ளது என்றால் அவர் வேறு வேறு தேதியில் கையொப்பம் செய்திருக்கலாம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பணம் கொடுக்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். 1 லட்சம் ரூபாய்கு மேல் பண பரிவர்த்தனை நடைபெற்றிருந்தால் அந்த ஆவணத்தை பதிவு செய்ய வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு பதிவு செய்யாத காரணத்தினால் வா.சா.ஆ.1 ஆவணம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலமாக எனக்கு எவ்வித பிரதிபலனும் கிடைக்க தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் என்பது அந்த சொத்து யார் பெயரில் இருந்து வருகிறது என்பதனை காட்டுவதற்கான ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு அருகில் எனக்கு சொந்தமான சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4,வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6 ஆவணங்கள் எனக்கு சொந்தமான சொத்துக்களுக்கு சம்மந்தமானது தாவா சொத்திற்கு சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

4. நான் தாவா சொத்து சம்மந்தமாக திருவெண்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் சீர்காழி வட்டாட்சியர்

அலுவலகத்தில் அமைதி பேச்சு வார்த்தை எனக்கு ம் 1, 2 பிரதிவாதிகளுக்கும் இடையே நடைப்பெற்றது என்றால் சரிதான். அந்த அமைதி பேச்சு வார்த்தையில் தாவா சொத்து 1–ம் பிரதிவாதியின் வசத்தில் உள்ளதால் நான் தலையிடக்கூடாது என முடிவெடுக்கப்பட்டது என்றால் சரயில்ல. நான் அமைதி பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவில்லை.நான் அமைதி பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு 1–ம் பிரதிவாதியின் சாதகமாக முடிவெடுத்தகாரணத்தினால் நான் அந்த பேச்சு வார்தை உடன்பாட்டில் கையெழுத்து செய்யாமல் வெளியேறிவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த பேச்சு வார்த்தையில் 'அ' தரப்பினராக நானும் மேலும் 4 நபர்களும் சேர்ந்து கலந்துகொண்டோம் என்றால் சரியல்ல. நான் தற்போது வழக்கிற்காக பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1–ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.